**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C 268/2020**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கங்காதரன் | தொழில் | : டிரைவர் |
| தந்தை பெயர் | : நாகராஜ் | சமயம் | : |
| கிராமம் | : ஒரத்தூர் | சாதி | : |
| வட்டம் | : ஸ்ரீபெரும்புதூர் | வயது | : 27 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 சுரேஷ் எனக்கு சித்தி மகன்.

2. கடந்த 2017 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் இருசக்கர வாகனத்தை எனது சித்தி மகன் சுரேஷ் ஓட்டிக்கொள்ள நான் பின்னால் அமர்ந்துகொண்டு ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஒரத்தூர் கிராமத்தில் இருந்து திருவண்ணாமலை கோவிலுக்கு செஞ்சி வழியாக சென்றோம். அப்போது சத்தியமங்கலம் அருகே சிவன் கோவில் எதிரில் செல்லும்போது பின்னால் வந்த அரசு பேருந்து ஓட்டுனர் எங்கள் வண்டி மீது மோதியதில் எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த சுரேஷ் என்பவருக்கு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தை ஆஜர் எதிரிதான் ஓட்டி வந்தார். காயம் பட்ட நாங்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சென்றோம். நான் 3 நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலிசார் விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**( 1. 02.01.2018 தேதியிட்ட புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C 268/2020**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஜெயராமன் | சமயம் | : |
| கிராமம் | : ஒரத்தூர் | சாதி | : |
| வட்டம் | : ஸ்ரீபெரும்புதூர் | வயது | : 33 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கங்காதரன் எனக்கு பெரியம்மா மகன்.

2. கடந்த 2017 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் இருசக்கர வாகனத்தில் ஒரத்தூரில் இருந்து திருவண்ணாமலை கோவிலுக்காக நானும், கங்காதரனும் சென்றோம். இருசக்கர வாகனத்தை நான் ஓட்டினேன். பின்னால் கங்காதரன் அமர்ந்து வந்தார். சத்தியமங்கலம் அருகே திருவண்ணாமலை நோக்கி சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த அரசு பேருந்து மோதியதில் கீழே விழுந்தோம். எனக்கு முகத்தில் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்த கங்காதரனுக்கு இடுப்பில் அடிபட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். 3 நாட்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். விபத்து ஏற்படுத்திய அரசுபேருந்தை ஆஜர் எதிரிதான் ஓட்டினார். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.